**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி**

அ.வ.எண். 358/2021 வா.சா.1ராஜசிம்மன்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 09.09.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல்விசாரணை தொடர்ச்சி**

| Sl.No. | Date | Exhibits Marked | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1 | | **வா.சா.ஆ.15** | புகைப்படம் | அசல் |
| 2 | 01-02-2010 | **வா.சா.ஆ.16** | தமிழ்நாடு அரசிதழ் | அசல் |
| 3 | 22-08-1991 | **வா.சா.ஆ.17** | வாதியின் சாதிச்சான்றிதழ் | அசலுடன் ஒப்பிட்ட நகல் |
| 4 | 01-10-2010 | **வா.சா.ஆ.18** | வாதியின் பான்கார்டு | அசலுடன் ஒப்பிட்ட நகல் |
| 5 | 06-02-2018 | **வா.சா.ஆ.19** | வாதியின் ஓட்டுநர் உரிமம் | அசலுடன் ஒப்பிட்ட நகல் |

( 1 , 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பிலும் 2 , 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பிலும் 11ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ. 15 புகைப்படம் இவ்வழக்கிற்கு தொடர்பற்றது என்றும் அப்புகைப்படத்திற்கு நெகட்டிவ் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் புகைப்படம் எடுத்தவர் மூலம் தான் குறியீடு செய்யப்பட வேண்டும் என்றும் ஆட்சேபணை செய்யப்படுகிறது.)

**1,3 முதல் 5 பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

1) வா.சா.ஆ.15 புகைப்படம் யாரால் எடுக்கப்பட்டது என எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 புகைப்படம் எந்த சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ. 15 புகைப்படம் எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்பதற்கான ஆதரவு எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான் . ஆனால் அது 2/03/1977 அன்று எடுக்கப்பட்டது . வா.சா. ஆ. 15 புகைப்படம் இவ்வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது

என்றால் சரியல்ல . அவ்வாறு பொய்யாக தயார் செய்யப்பட்டதால் தான் நெகட்டிவ் இல்லாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகைப்படம் எடுத்து 47 ஆண்டுகள் ஆனதால் தான் நெகட்டிவ் இல்லை. எனக்கு என்ன வயது என்றால் 48 ஆகும் . அவ்வாறு எனில் அப்புகைப்படம் நான் பிறந்த பிறகு எடுக்கப்பட்டதா என்றால் இல்லை . என் பெற்றோர் திருமணத்தின் போது எடுக்கப்பட்டது. புகைப்படம் எடுத்து 47 ஆண்டுகள் ஆனதாகவும் எனக்கு வயது 48 ஆவதாகவும் சொல்லியுள்ள நிலையில் என் பெற்றோர் திருமணத்திற்கு ஒரு ஆண்டு முன்பே நான் பிறந்து விட்டேனா என்றால் இல்லை. கணக்கு பிழையாக கூறிவிட்டேன் . அப்புகைப்படம் வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்டதால் தான் இவ்வாறு முன்னுக்கு பின்னுக்கு முரணாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**2,6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

**(1,3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

**11ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

**(1,3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

**ஒப்பம் /- ( M.S.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி